## <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**நாள்** 13.02.2025

**அசல் வழக்கு எண் 102/ 2017**

**வா.சா.2 - தனலட்சுமி க/பெ. ஜெயராமன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

நீங்கள் எங்கு குடி இருக்கிறீர்கள் என்றால் ராகவா நாட்டான் தெரு, உத்திரமேரூரில் குடியிருந்த வருகிறேன். உங்கள் பெயரில் சுமதி என்பவர் வழக்கு தாக்கல் செய்து உள்ளார்களா என்றால் சரிதான் அந்த அசல் வழக்கு எண் **8/2024** என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் **8/2024** என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் மதுராந்தகம் வட்டம் மின்னல் கிராமத்தில் குடியிருப்பதாக போட்டு உள்ளீர்கள் அது சரியா தவறா என்றால் எனக்கு தெரியவில்லை. உங்களுக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீங்கள் மின்னல் கிராமத்தில் தான் குடியிருக்கிறீர்கள் உத்திரமேரூரில் குடியிருப்பதாக தவறாக கூறுகிறீர்கள் என்றால் சரியில்லை. உங்களுக்கு என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்கின்றீர்கள் என்றால் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல் பிரதிவாதி கோவிந்தம்மாள் பதிலுறையில் என்ன கூறியுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் பிரமாண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து யாருடைய சொத்து என்றால் என் அப்பா சொத்து. உங்கள் அப்பாவிற்கு இந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் தெரியாது. நீங்கள் வழக்கில் யாருடைய சொத்து என்று போட்டு உள்ளீர்கள் என்றால் என் பாட்டன் சொத்து என்று போட்டு உள்ளேன். பாட்டன் சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் அப்பா எல்லப்பன் ஒரு பகுதி சொத்தினை **1957** லும் ஒரு பகுதி **1968** லும் கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் அப்பா எல்லப்பன் கிரையம் பெற்ற சொத்து அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்கிற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உங்கள் அப்பா எல்லப்பனை யார்

பராமரித்து வந்தது என்றால் முனியம்மாள் என்னுடைய அம்மா பராமரித்து வந்தார். உங்கள் அப்பாவிற்கு எத்தனை மனைவிகள் என்றால் **2** மனைவிகள் இருந்தனர். உங்கள் அம்மா இரண்டாவது மனைவியா என்றால் முதல் மனைவி ஆவார். உங்கள் அப்பா எல்லப்பன் என்பவரை முதல் பிரதிவாதி கோவிந்தம்மாள் தான் பராமரித்து வந்தார் உங்கள் அம்மா பராமரிக்கவில்லை என்றால் சரி இல்லை. உங்கள் அப்பாவை கோவிந்தம்மாள் பராமரித்து வந்ததால் **1995** ஆம் ஆண்டு கோவிந்தம்மாள் பெயரில் உங்கள் அப்பா தாவா சொத்து குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அவ்வாறு எழுதி வைக்க வாய்ப்பு இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த விவரம் எப்பொழுது தெரிந்து கொண்டீர்கள் என்றால் **2016** இல் தெரிந்து கொண்டேன். வழக்கு சொத்து அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்று சொல்லி வழக்கறிஞர் வாயிலாக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை. உங்கள் அப்பா உயில் எழுதி வைத்ததாக சொல்லி உள்ளீர்கள் அது எப்போது எழுதினார் என்றால் **1996** இல் எழுதினார். மாதம் தேதி தெரியுமா என்றால் தெரியாது. எங்கு வைத்து உயில் எழுதப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது யார் எழுதியது தெரியுமா என்றால் தெரியாது யாரெல்லாம் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. உயில் எப்போது எழுதினார் தெரியுமா என்றால் தெரியாது. அப்போழுது என்ன உங்களுக்கு வயது என்றால் தெரியாது. அந்த ஆவணம் ஏன் பதிவு செய்யவில்லை என்றால் அதை அப்பாவிடம் தான் கேட்க வேண்டும் எனக்கு அதைப் பற்றி தெரியாது. உங்கள் அப்பா அவ்வாறு உயில் எதுவும் எழுதவில்லை நீங்கள் வழக்கிற்காக தயாரித்த உயில் என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் அப்பா **1995** லேயே முதல் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டார் **1996** இல் உங்கள் அப்பாவிற்கு தாவா சொத்தில் உரிமை எதுவும் இல்லை அவ்வாறு உரிமை இல்லாத சமயத்தில் அவர் எழுதிய உயில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. எவ்வளவு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் **5 ½** சென்ட்க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்றால் முன்புறம் ஓட்டு வீடும் நடுவில் மெத்தைவீடும் உள்ளது. ஒரு சென்டின் மதிப்பு என்ன என்றால் தெரியாது. ஒரு சென்டின் மதிப்பு சுமார் **5** லட்சம் என்றால் ஐந்து லட்சத்திலிருந்து **6** லட்சம் வரை போகும். தரை மதிப்பு ரூபாய் **27** லட்சம் பெருமானம் உண்டு என்றால் சரிதான். வீட்டின்

மதிப்பு **25** லட்சம் இருக்கும் என்றால் பழைய வீடு ஆகும். இந்த நீதிமன்றத்திற்கு இந்த வழக்கினை விசாரிக்க அதிகார வரம்பு இல்லை. சொத்தின் மதிப்பு தவறாக போட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியில்லை. **1995** இல் உங்கள் அப்பா கோவிந்தம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் ஆகவே அவரை தவிர வேறு யாருக்கும் சொத்தில் உரிமை கிடையாது அவர் தனிப்பட்ட உரிமையாளர் என்றால் சரியில்லை. அவருக்கு வருவாய் துறையினர் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற பட்ட அரசு வழங்கிய பட்டா என்றால் சரிதான் அது பி.சா. ஆ **1** ஆகும். உங்களிடம் காட்டப்படுகின்ற வீட்டு வரி ரசீது கோவிந்தம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான் அது பி.சா.ஆ **2** ஆகும். நீங்கள் மேற்படி வருவாய் ஆவணங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்ததாக கூறுகிறீர்கள் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் நான் ஆட்சேபணை தெரிவித்து கடிதம் கொடுத்தேன் அவர்கள் வாங்கிக் கொள்ளவில்லை. அதனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் கோவிந்தம்மாள் பெயரில் உள்ளது. அதற்கு ஆட்சேபனை தெரிவித்தீர்களா தெரிவித்தேன் அந்த ஆட்சேபனை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை தெரிவித்து இருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியில்லை. தாவா சொத்தின் எதிர்ப்புறம் உள்ள வீடு பழனி வீடா என்றால் எதிர்ப்புறம் இரண்டு வீடு தள்ளி உள்ளது. அந்த பழனி வீடு உங்கள் கணவர் ஜெயராமன் பெயரில் உள்ளது என்றால் சரிதான் அதனை வாடகைக்கு அவர் விட்டு உள்ளார் என்றால் சரிதான். பழனி உங்களுக்கு என்ன வேண்டும் என்றால் அவர் என்னுடைய அண்ணன் அவர். அவர் உங்கள் உடன் பிறந்த சகோதரரா என்றால் என்னுடைய சித்தி மகன் ஆவார் அதாவது உங்கள் அப்பாவின் இரண்டாவது மனைவியின் மகன் ஆவார் என்றால் சரிதான். அந்தப் பழனியை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக நீங்கள் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டதால் பழனியை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக நான் சேர்க்கவில்லை. சரியான தரப்பினரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி இல்லை. நீங்கள் கோரும் பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கது அல்ல பாகம் வழங்க தேவை இல்லை என்றால் சரியில்லை

Type written by the Typist in Open Court to my dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.